# மதவாச்சி பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

-----------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் மதவாச்சி பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதவாச்சி பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 05 | - | - | 72 |
| | -மேற்படி- | 02 | - | 962 | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 03 | 81 | - | - |
| | -மேற்படி- | 03 | - | 410 | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 33 | - | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 03 | - | 382 | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 08 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,258,478 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,305,780 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,559,324 கூட்டுத்தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 போலியான சொத்துக்கள்

பொதுக்களஞ்சியம் மற்றும் மின்சாரக் களஞ்சியம் என்பன தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 161,528 தொகையான இருப்புக்கள் சபைக்குச் சொந்தமாகக் காணப்படாதிருந்த போதிலும் அந்த இருப்பு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,785,877 ஆக இருந்ததுடன் 03 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 228,795 ஆக இருந்தது.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் சில வருடங்களாக முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,148,229 தொகையான 06 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டின் போது தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,221,686 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,433,832 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 898 | 1,230 | 1,588 |
| (ii) | வுாடகை | 2,983 | 3,963 | 2,921 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,179 | 1,343 | 491 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,693 | 9,531 | 6,207 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதி ரூபா 1,051,121 ஆகும்.

**2.2.3 கடை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/எல்ஜீ/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் மதவாச்சி பொதுச் சந்தைக் கடைகளின் வாடகை 10 வருடங்களுக்கு முன்னர் சபையினால் தீர்மானிக்கப்பட்ட அளவின் அடிப்படையில் அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2011 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 2½ வருடங்கள் வரையான காலமாக 05 கடைகளிலிருந்து அறவிடவேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 193,800 தொகையினை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 26 கடைகள் பொதுச் சந்தை நவீனமயப்படுத்துவதற்கு முன் அக்காணியில் காணப்பட்டதுடன் தற்போது 10 வருட காலமாக இந்தக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபையினால் இழக்கப்பட்ட வருமானம் ஆகக் குறைந்தது ரூபா 276,000 ஆகக் காணப்பட்டது.

**2.3 ஒப்பந்த நிருவாகம்**

(அ) மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 245,000 தொகையான 06 செயற்திட்டங்களுக்காக 2011 இல் மாகாண சபை பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் 2011 நவம்பர் 30 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாணசபை மற்றும் பிரதேச அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 செயற்திட்டங்கள்

2011 நவம்பர் 03 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியணினரை விஞ்சி 05 பதவிகளுக்காக ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 533,727 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) முன்னோக்கிய வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்கப்படுகின்ற கட்டுநிதிகள் உரிய ஆண்டின் போதே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 55,000 தொகையான முற்பணம் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு